ந.க.ஜி2/20774/2018

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
வேலூர் - 09
நாள்: 26.07.2019

# சுற்றறிக்கை

பொருள்: **சான்றுகள்** - வேலூர் மாவட்டம் - சிறுபான்மையினர் பிரிவு மதத்தினருக்கான மத்திய மற்றும் மாநில அரசின் சலுகைகள் பெற - சிறுபான்மை சமண மதத்தினருக்கான சான்றிதழ் வழங்குவது - அறிவுரைகள் வழங்குவது - தொடர்பாக

பார்வை:
1. அரசாணை எண்: 125 வருவாய் எண்.RA3(2)துறை, நாள்: 12.03.2015.
2. கூடுதல் தலைமை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.RA5(3)/22832/2014, நாள்:13.07.2019.

****

பார்வை 1-ல் காணும் அரசாணையில் முஸ்லிம்கள், கிறுத்துவர்கள், சீக்கியர்கள், புத்த மதத்தினர் மற்றும் பார்சி மதத்தினருக்கு வழங்கப்பட்டு வரும் சமய சிறுபான்மையினருக்கான மத்திய மற்றும் மாநில அரசின் சலுகைகள் சமண மதத்தினருக்கும் நீட்டிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. எனவே தமிழகத்தில் வசித்துவரும் சமண மதத்தினர் மேற்படி சலுகைகள் பெறும் வகையில் சமய சிறுபான்மையினர் சான்று ( Regligious Minorities Certificate) வழங்க கீழ் வரும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

**<u>சிறுபான்மை சமண மதத்தினர் சான்று கோரும் விண்ணப்பபடிவத்தில் கீழ்கண்ட விவரங்கள் மனுதாரால் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.</u>**

அ. விண்ணப்பதாரரின் புகைப்படம்.

ஆ. முகவரிக்கான ஆதாரம் (ஆதார் அட்டை / வாக்காளர் அடையாள அட்டை / ஓட்டுனர் உரிமம் / வங்கி கணக்கு புத்தகம் / ஓய்வூதியம் பெறும் ஆணை இவற்றில் ஏதேனும் ஒன்று)

இ. விண்ணப்பதாரரின் பெற்றோர்களால் ஏற்கெனவே பெற்றுள்ள சமணர் மத சிறுபான்மைப் பிரிவு சான்றிதழின் நகல் இணைக்கப்படவேண்டும்.

ஈ. விண்ணப்பதாரரின் பெற்றோரின் சமணர் மத சிறுபான்மைப் பிரிவு சான்றிதழ் இணைக்கப்படவில்லையெனில், மாவட்ட ஆட்சியரால் அங்கீகரிக்கப்பட்ட ஜெய்ன் கோயில், ஜெய்ன் ஷ்தானக் மற்றும் ஜெய்ன் பவன் முதலிய சங்கங்களில் வழங்கப்பட்ட சான்றிதழ் இணைக்கப்படவேண்டும்.

உ. விண்ணப்பத்தில் தாய் மற்றும் தந்தையின் மதம் குறிப்பிட்டு இருக்க வேண்டும்.

ஊ. விண்ணப்பதாரின் சுய உறுதிமொழி அளித்திருக்க வேண்டும்.

**<u>வட்டாட்சியர் சான்று வழங்கும் போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள்.</u>**

1. விண்ணப்பதாரர் இணைத்துள்ள அங்கீகரிக்கப்பட்ட ஜெய்ன் கோயில், ஜெய்ன் ஷ்தானக் மற்றும் ஜெய்ன் பவன் முதலிய சங்கங்களின் வாயிலாக வழங்கப்பட்ட சான்றிதழ் மாவட்ட நிர்வாகத்தால் அங்கிகரிக்கப்பட்டவையாக இருக்க வேண்டும்.

2. புல விசாரணை அறிக்கையில் அப்பகுதியில் வாழும் சமண சமயத்தினர் ஐந்து நபர்களின் விவரம் மற்றும் வாக்குமூலம் இணைக்கப்பட வேண்டும்.

3. பெற்றோரின் சிறுபான்மை சமண மதத்தினருக்கான சான்று இணைக்கப்பட்டிருப்பின் புல விசாரணை செய்ய வேண்டியதில்லை.

4. மனுதாரர் அங்கிகரிக்கப்பட்ட ஜெய்ன் கோயில், ஜெய்ன் ஷ்தானக் மற்றும் ஜெய்ன் பவன் முதலிய மாவட்ட ஆட்சித்தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களின் சான்றிதழ் வழங்கபடவில்லையெனில், மனுதாரர் தற்போது வசிக்கும் பகுதியில் ஐந்து வருடங்களுக்கு முன்னதாகவே குடிபெயர்ந்தவராக இருக்க வேண்டும்.

**<u>சான்றிதழ் வழங்க வேண்டிய கால அளவு:</u>**

அ. மனுதாரரின் பெற்றோர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட சமண மத சான்றிதழ் இணைப்பாக வைத்து மனு அளித்திருந்தால் வட்டாட்சியர் அவர்களால் **<u>நான்கு நாட்களுக்குள்</u>** சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

ஆ. மனுதாரரின் பெற்றோர் ஏற்கனவே வழங்கப்பட்ட சமண சிறுபான்மையினர் மத சிறுபான்மையினர் சான்றிதழ் இணைக்கப்படவில்லையெனில் கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளர் மற்றும் வட்டாட்சியர் அவர்களால் விசாரணை செய்து **<u>ஏழு நாட்களுக்குள்</u>** சான்றிதழ் வழங்கப்பட வேண்டும்.

**(கால அளவு -கி.நி.அ (2 நாட்கள்) - வ.ஆ(2 நாட்கள்) - வட்டாட்சியர் (3 நாட்கள்)**

இப்பொருள் தொடர்பாக மேற்கண்ட அறிவுரைகளை பின்பற்றி சமய சிறுபான்மையினர் சமண மதத்தினருக்கான சான்றிதழ்கள் காலதாமதமின்றி வழங்க அனைத்து வட்டாட்சியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இணைப்பு - சான்று படிவம்

மாவட்ட வருவாய் அலுவலர்,
வேலூர்.

பெறுநர்
1. சார் ஆட்சியர்கள், வேலூர் / இராணிப்பேட்டை / திருப்பத்தூர்.
2. அனைத்து வட்டாட்சியர்கள், வேலூர் மாவட்டம்.
3. இருப்புக் கோப்பு.